## பொருளாதார சமூக நலன்புரிச் செலவுகள்

### வலு

1992 இன் முதல் நான்கு மாதங்களில் நிலவிய நீண்ட வரட்சி நிலைமைகளின் காரணமாக வலு நிலைமையில் கடுமையான பின்னடைவு ஒன்று காணப்பட்டது. ஆனால் ஆண்டின் பின் அரைப் பகுதியில் இது முன்னேற்றமடைந்தது. ஆண்டின் முதல் அரைப் பகுதியில் கடுமையாக வீழ்ச்சியடைந்த நீர் மின்வலு உருவாக்கம் வானிலைத் தன்மைகள் சாதகமாக மாறியதைத் தொடர்ந்து முன்னேற்றம் கண்டது. இதன் விளைவாக 1992 இன் இரண்டாம் அரைப் பகுதியில் இலங்கை மின் சபைக்கு வெப்ப வலுவில் தங்கியிருத்தலை மிகவும் குறைந்த மட்டமொன்றுக்குக் குறைத்துக்கொள்ள இயலுமாகக் காணப்பட்டது. மின் வழங்கும் செயல் முறைக்கான தடைகளுக்கு மத்தியிலும் ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் மின் வலுவுக்கான கேள்வி மேலும் விரிவடைந்தது. இதேவேளையில் வெப்ப மின்வலு உருவாக்கம் காரணமாகப் பாரடீசல் மற்றும் உலையெண்ணெய் என்பனவற்றிற்கான கேள்வியில் ஏற்பட்ட கூடிய அதிகரிப்பானது ஆண்டின் பிற்பகுதியில் கணிசமான அளவில் குறைவடைந்தது. எனினும், தன்னியக்க டீசல், சிறப்பு டீசல் என்பனவற்றின் உள்நாட்டு நுகர்வு, இந்த உற்பத்திப் பொருட்களின் சார்பு ரீதியிலான விலை அனுகூலங்களின் காரணமாக இவ்வாண்டில் தொடர்ந்து அதிகரித்தது.

ஏனைய மரக்கூறுகளுடன் விறகு, வேளாண்மை எச்சங்கள், மிருகங்களின் கழிவுப் பொருட்கள் என்பனவற்றை உள்ளடக்கிய வர்த்தகமல்லா வலு மூலங்கள் தொடர்ந்தும் பாரிய வலு மூலங்களாக விளங்கின. 49 இலட்சம் தொன்கள் எண்ணெய்க்குச் சமமான வலு என மதிப்பிடப்பட்டுள்ள இந்த மூலங்கள் நாட்டின் மொத்த வலு நிரம்பலில் 69 சதவீதத்தைக் கொண்டிருந்த வேளையில் பெற்றோலியம், மின் மற்றும் திரவப் பெற்றோலிய வாயு என்பன எஞ்சியதற்கு வகை கூறின.

1992 இன் இறுதியளவில் சமனலவெவ நீர் மின்வலுச் செயற்றிட்டம் தொடக்கி வைக்கப்பட்டதுடன் ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் நீர் மின்வலுவின் நிறுவப்பட்ட இயலளவு 120 மெகாவாட்டுக்களினால் 1,137 மெகாவாட்டுக்களுக்கு விரிவடைந்தது. இதேவேளையில் 1992 இல் வெப்ப மின்வலுவின் நிறுவப்பட்ட இயலளவு 272 மெகாவாட்டுக்களில் மாறாது காணப்பட்டது. இதன் விளைவாக, 1992 இல் நாட்டின் மின் உருவாக்கத்தின் மொத்த நிறுவப்பட்ட இயலளவு 120 மெகாவாட்டுக்களினால் 1,410 மெகாவாட்டுக்களுக்கு அதிகரித்தது.

1992 இல் இலங்கை மின்சபையினால் உருவாக்கப்பட்ட மொத்த வலு 3,540 கிகாவாட் மணித்தியாலங்களாக விளங்கியது. முன்னைய ஆண்டின் 7 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் இது 5 சதவீத அதிகரிப்பொன்றாக இருந்தது. 1992 இல் மொத்த நீர் மின்வலு உருவாக்கம் 2,900 கிகாவாட் மணித்தியாலங்களாக விளங்கி 7 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் நீர்த்தேக்கங்களில் நீர் மட்டங்கள் கடுமையாகக் குறைவடைந்தமையின் காரணமாக நீர் மின்வலு உருவாக்கம் 31 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையே இதற்கான முழுக் காரணமாக அமைந்தது. இதன் விளைவாக, வெப்ப மின்வலு உருவாக்கம் கணிசமாக அதிகரித்து 1991 இன் 260

கிகாவாட். மணித்தியாலங்களுடன் ஒப்பிடுகையில் 1992 இல் 640 கிகாவாட் மணித்தியாலங்களை எய்தியது. இதன் விளைவாக மின் உருவாக்கத்திற்கான எரிபொருட் செலவு 1991 இன் ரூ. 4,590 இலட்சத்திலிருந்து ஆய்விற்குரிய ஆண்டில் ரூ. 16,570 இலட்சத்திற்கு அதிகரித்தது. இதே வேளையில் வலு உருவாக்கம், கடத்தல், பகிர்ந்தளிப்பு என்பனவற்றில் ஏற்பட்ட இழப்புக்கள் 1991 இன் 18.8 சதவீதத்திலிருந்து 1992 இல் 17.6 சதவீதத்திற்குக் குறை வடைந்தன.

இவ்வாண்டில் மின்வலுவுக்கான தீர்வை அமைப்பு முறை மாறாது காணப் பட்டபோதிலும் மின்வலு உருவாக்கத்திற்கான செலவு அதிகரிப்பின் காரணமாக 1992 மாச்சிலிருந்து பயனுறும் வகையில் 25 சதவீத எரிபொருள் சீராக்கக் கட்டணமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும், முறையே 50 அலகுகளுக்குக் குறைவான வீட்டுப் பாவனையாளர்களுக்கும் 150 அலகுகளுக்குக் குறைவான, பாவனையைக் கொண்ட மத நிறுவனங்களுக்கும் இந்தத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது. மேலும் மின் நுகர்வைக் குறைக்கும் நோக்கில் இலங்கை மின்சபை 1992 ஏப்பிரல்—மே காலப் பகுதியில் நாடளாவிய மின்வெட்டு ஒன்றையும் விதித்தது. இத்தகைய நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் மின் விற் பனைகள் 2,915 கிகாவாட் மணித்தியாலங்களாக அமைந்து முன்னைய ஆண்டை விட 6 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தன. வீட்டுத்துறைக்கான விற்பனைகள் 8 சதவீதத்தினால் 696 கிகாவாட் மணித்தியாலங்களுக்கு அதிகரித்தன. கிராமிய மின்னூட்டல் திட்டங்கள் மேலும் விரிவாக்கப்பட்டதன் காரணமாக நுகர்வோர் களின் எண்ணிக்கை 1991 இன் 751,614 இலிருந்து 1992 இல் 897,542 இற்கு அதிகரித்தமையே இதற்கான பெருமளவு காரணமாக அமைந்தது. இதேவேளை யில் ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்தின் அதிகரித்த நடவடிக்கைகளைப் பிரதிபலிக்கும் வகையில் கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறைக்கான விற்பனைகள் முறையே 9 சதவீதத்தினாலும், 8 சத வீதத்தினாலும் அதிகரித்தன. எனினும் 1992 இல் உள்ளூராட்சி மன்றங்களுக் கான தொகை வடிவிலான விற்பனைகள் 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

பெற்றோலிய இறக்குமதி மீதான மொத்தச் செலவு ரூ. 139,380 இலட்ச மாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 8 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. மசகெண்ணெய் பீப்பாய் ஒன்றுக்கான சராசரி விலை 1991 இன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 19.50 (ரூபா 807) இலிருந்து 1992 இல் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 18.32 (ரூபா 803) இற்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந் தது. இதேவேளையில் மசகெண்ணெயின் இறக்குமதித் தொகை 1991 இன் 1,625,522 மெற்றிக் தொன்களிலிருந்து 1992 இல் 1,296,518 மெற்றிக் தொன்களுக்கு 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மசகெண்ணெய் வடிகலப் பிரிவில் பாரிய திருத்தமொன்றிற்காக 1992 யூனிலிருந்து செத்தெம்பர் வரை தூய்மி மூடப்பட்டிருந்தமையே இதற்கான பெருமளவு காரணமாக அமைந்தது. இதன் விளைவாக, சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களின் இறக்குமதித் தொகை 1991 இன் 218,537 மெற்றிக் தொன்களிலிருந்து 1992 இல் 661,513 மெற்றிக் தொன்களுக்கு மும்மடங்காக அதிகரித்தது. இதே வேளையில் கொழும்பு வாயு கூட்டுநிலையத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட திரவப் பெற்றோலிய வாயுவின் தொகை இவ்வாண்டில் 13,071 மெற்றிக் தொன்களினால் 31,383 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்து 1992 இல் திரவப் பெற்றோலிய வாயு இறக்குமதிகளின் மொத்தப் பெறுமதியை 69 சதவீதத்தினால் ரூ. 4,040 இலட்சத்திற்கு அதிகரிக்கச் செய்தது.

## அட்டவணை 1.25

## வலுத்துறையின் அடிப்படைப் பண்புகள் 1991– 1992

| விடயம் | அலகு | 1991 | 1990இற்கு மேலாக சதவீத மாற்றம் | 1992* | 1991இற்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| **1. பெற்றோலிய உற்பத்திகள்** | | | | | |
| 1.1 ஏற்றுமதிகளின் அளவு ... | மெ.தொ. | 523,211 | — 15.7 | 410,164 | — 21.6 |
| 1.2 ஏற்றுமதிகளின் பெறுமதி ... | ரூ. ப. இ. | 3,289.4 | — 17.2 | 2,770.6 | — 15.8 |
| ... | சிஎஉ ப.இ. | 58.1 | — 20.4 | 44.9 | — 22.7 |
| 1.3 இறக்குமதிகளின் அளவு | | | | | |
| 1.3.1 மசகெண்ணெய் ... | மெ. தொ. | 1,625,522 | — 8.6 | 1,296,518 | — 20.2 |
| 1.3.2 சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் ... | ,, | 218,537 | 74.8 | 661,513 | 202.7 |
| 1.3.3 திரவப்பெற்றோலிய வாயு | ,, | 18,312 | — 8.3 | 31,383 | 71.4 |
| 1.4 இறக்குமதிகளின் பெறுமதி (கொ.கா) | | | | | |
| 1.4.1 மசகெண்ணெய் ... | ரூ.ப.இ. | 9,667.14 | — 22.1 | 7,666.70 | — 20.7 |
| ... | சிஎஉ | 170.77 | — 25.1 | 124.16 | — 27.3 |
| 1.4.2 சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் ... | ரூ.ப.இ. | 2,566.78 | 124.0 | 5,526.41 | 115.3 |
| ... | சிஎஉ ப.இ. | 45.34 | 116.4 | 89.50 | 97.4 |
| 1.4.3 திரவப்பெற்றோலிய வாயு... | ரூ.ப.இ. | 239.35 | 13.8 | 404.11 | 68.8 |
| ... | சிஎஉ ப.இ. | 4.23 | 9.6 | 6.54 | 54.7 |
| 1.5 மசகெண்ணெயின் சராசரி விலை (கொ. கா.) ... | ரூ./பீப்பா | 806.76 | — 14.4 | 803.00 | — 0.5 |
| ... | ஐ.அ.டொலர்/பீப்பாய் | 19.50 | — 17.1 | 18.32 | — 6.0 |
| 1.6 உள்நாட்டு விற்பனைகள் ... | மெ. தொ. | 1,240,494 | 7.7 | 1,486,844 | 19.9 |
| 1. .1 சிறப்புப் பெற்றோல் ... | ,, | 159,765 | — 10.7 | 164,875 | 3.2 |
| 1.6.2 தன்னியக்க டீசல் .. | ,, | 539,983 | 5.3 | 606,527 | 12.3 |
| 1.6.3 பார டீசல் ... | ,, | 32,528 | 62.0 | 125,274 | 285.1 |
| 1.6.4 சிறப்பு டீசல் ... | ,, | 19,989 | 19.8 | 22,722 | 13.7 |
| 1.5.5 மண்ணெண்ணெய் ... | ,, | 173,425 | 3.7 | 189,363 | 9.2 |
| 1.6.6 உலைஎண்ணெய் ... | ,, | 204,356 | 27.4 | 251,689 | 23.2 |
| 1.6.7 அவுட்டூர் ... | ,, | 72,715 | 19.0 | 81,513 | 12.1 |
| 1.6.8 ஏவி வாயு ... | ,, | 211 | — 12.8 | 188 | — 10.9 |
| 1.6.9 திரவப்பெற்றோலிய வாயு | ,, | 37,522 | 10.2 | 44,693 | 19.1 |
| 1.7 உள்நாட்டு விலை | | | | | |
| 1.7.1 சிறப்புப் பெற்றோல் ... | ரூ/லீற்றர் | 30.00 | — | 33.00 | 10.0 |
| 1.7.2 தன்னியக்க டீசல் ... | ,, | 11.00 | — | 11.65 | 5.9 |
| 1.7.3 பார டீசல் ... | ,, | 10.60 | — | 11.15 | 5.2 |
| 1.7.4 சிறப்பு டீசல் ... | ,, | 13.00 | — | 14.55 | 11.9 |
| 1.7.5 மண்ணெண்ணெய் ... | ,, | 8.80 | — | 8.80 | 0.0 |
| 1.7.6 உலை எண்ணெய் ... | | | | | |
| 500 செக்கண்ட் ... | ,, | 6.55 | — 0.8 | 7.10 | 9.5 |
| 800 செக்கண்ட் ... | ,, | 6.25 | — 0.8 | 6.80 | 8.8 |
| 1000 செக்கண்ட் ... | ,, | 5.95 | — 0.8 | 6.50 | 9.2 |
| 1.7.7 நிலக்கீல் ... | ,, | 10.90 | — 0.9 | 15.15 | 39.0 |
| 1.7.8 திரவப்பெற்றோலிய வாயு | ரூ.கி.கி. | 16.54 | — | 16.54 | — |
| **2. மின் வலு** | | | | | |
| 2.1 நிறுவப்பட்ட இயலளவு ... | மெ. வா. | 1,289.65 | — | 1.409.65 | 9.3 |
| 2.1.1 நீர் மின் ... | ,, | 1,017.45 | — | 1,137.45 | 11.8 |
| 2.1.2 வெப்ப மின் ... | ,, | 272.20 | — | 272.20 | — |
| 2.2 உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் | கி.வா.ம | 3,376.6 | 7.2 | 3,539.9 | 4.8 |
| 2.2.1 நீர் மின் ... | ,, | 3,116.2 | — 0.9 | 2,900.1 | — 6.9 |
| 2.2.2 வெப்ப மின் ... | ,, | 260.4 | 5,005.9 | 639.8 | 145.7 |
| 2.3 மொத்த விற்பனைகள் .. | கி.வா.ம | 2,742.4 | 5.1 | 2915.0 | 6.3 |
| 2.3.1 வீடு ... | ,, | 643.6 | 25.1 | 695.5 | 8.1 |
| 2.3.2 கைத்தொழில் ... | ,, | 958.2 | 5.3 | 1,047.4 | 9.3 |
| 2.3.3 வர்த்தகம் ... | ,, | 547.4 | 7.5 | 589.1 | 7.6 |
| 2.3.4 உள்ளூராட்சி மன்றங்கள் ... | ,, | 571.7 | 13.0 | 554.4 | — 3.0 |
| 2.3.5 தெரு விளக்குகள் ... | ,, | 21.5 | 20.1 | 28.6 | 33.0 |

* தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
இலங்கை மின்சபை
வரையறுக்கப்பட்ட கொழும்பு வாயு கம்பெனி.

1992 இல் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் உள்நாட்டு நுகர்வு 1,486,844 மெற்றிக் தொன்களாகும். முன்னைய ஆண்டின் 8 சதவீத விரிவாக் கத்துடன் ஒப்பிடுகையில் இது 20 சதவீத அதிகரிப்பொன்றாகும். பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் கேள்வியில் காணப்பட்ட கணிசமான அதிகரிப்பிற்கு இலங்கை மின் சபையினால் வெப்ப மின்வலு உருவாக்கத்திற்காகப் பாரடீசல் மற்றும் உலையெண்ணெய் என்பன அதிகளவில் நுகரப்பட்டமையே பெருமளவு காரணமாக அமைந்தது. 1992 இல் பாரடீசலுக்கான கேள்வி 1991 இன் 32,528 மெற்றிக் தொன்களிலிருந்து 125,274 மெற்றிக் தொன்களுக்கு அதிக ரித்தவேளையில் உலையெண்ணெயின் நுகர்வு இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 204,356 மெற்றிக் தொன்களிலிருந்து 251,689 மெற்றிக்தொன்களுக்கு அதி கரித்தது. தன்னியக்க டீசலுக்கான கேள்வி 6 சதவீத விலை அதிகரிப்பிற்கு மத் தியிலும் 606,527 மெற்றிக் தொன்களாக விளங்கி இவ்வாண்டில் 12 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. சிறப்புப் பெற்றோலுக்கான கேள்வி 164,875 மெற்றிக் தொன்களாக விளங்கி 10 சதவீத விலை அதிகரிப்பிற்கு மத்தியிலும் 1992 இல் 3 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. ஆய்விற்குரிய காலப் பகுதியில் மண் ணெண்ணெயின் நுகர்வும் 9 சதவீதத்தினால் 189,363 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. இதே வேளையில் 1992 இல் திரவப் பெற்றோலிய வாயுவுக்கான கேள்வி கணிசமான 19 சதவீதத்தினால் 44,693 மெற்றிக் தொன்களுக்கு அதி கரித்து சமையல் நோக்கங்களுக்காக, வாயுவின் அதிகரித்த கேள்வியைப் பிரதி பலித்தது.

**போக்குவரத்து**

1992 இல், வேறுபட்ட துணைத்துறைகளின் மாறுபட்ட செயலாற்றங் களுடன் போக்குவரத்துத்துறை கலப்பான பெறுபேறுகளைப் பதிவு செய்தது. ஆய்விற்குரிய காலப் பகுதியில் மக்கள் மயப்படுத்தப்பட்ட பேருந்துக் கம்பனிகளின் தொழிற்பாடுகளின் அளவு மேலும் அதிகரித்தது. தனியார்துறைப் பயணிகள் போக்குவரத்துப் பணிகளும் விரிவடைந்தன. எனினும் 1992 இல் இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் (இபுப) நடவடிக்கைகள் சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தன.

1990 திசெம்பரில் ஆரம்பிக்கப்பட்ட மக்கள்மயப்படுத்தல் நிகழ்ச்சித் திட் டத்தின்கீழ், 1992 இறுதியில் மொத்தமாக 87 பேருந்துக் கூட்டு நிலையங்கள் நிறுவப்பட்டன. 1992 இன் இறுதியில் மொத்தமாக 425 புதிய பேருந்துகள் 1990 திசெம்பரில் தொடங்கப்பட்ட மக்கள் மயப்படுத்தப்பட்ட கூட்டு நிலையங் களினால் ஏற்கனவேயுள்ள ஊர்தித் தொகுதிக்குக் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட வேளையில் உலக வங்கி நிதியிடல் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 1,600 பேருந் துக்கள் திருத்தப்பட்டன. மேம்படுத்தப்பட்ட பேருந்துத் தொகுதிகளின் விளை வாக மக்கள் மயப்படுத்தப்பட்ட கூட்டு நிலையங்களினால் தொழிற்படுத்தப்பட்ட பேருந்துகளின் சராசரி எண்ணிக்கை 1991 இன் 3,359 இலிருந்து 1992 இல் 3,550 இற்கு அதிகரித்தது. இதன் விளைவாக மக்கள் மயப்படுத்தப்பட்ட கூட்டு நிலையங்களின் தொழிற்படுத்தப்பட்ட கிலோமீற்றர்களின் அளவு 1992 இல் 9 சதவீதத்தினால் 2,680 இலட்சம் கிலோ மீற்றர்களுக்கு அதிகரித்தது.இதேபோன்று 1992 இல் 128,400 இலட்சம் கிலோமீற்றர்களாக விளங்கிய பயணிகள் கிலோ மீற்றர்கள் முன்னைய ஆண்டின் 14 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 12 சதவீத அதி கரிப்பைப் பிரதிபலித்தன. இதன் விளைவாக மக்கள் மயப்படுத்தப்பட்ட கூட்டு நிலையங்களின் மொத்த வருவாய் 1991 இன் ரூ. 27,610 இலட்சத்திலிருந்து

1992 இல் ரூ. 31,060 இலட்சத்திற்கு அதிகரித்து முன்னைய் ஆண்டைவிட 13 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

தொழிற்படுத்தப்பட்ட கிலோமீற்றர்களின் நியதியில் 1992 இல் இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் தொழிற்பாடுகளின் அளவு 75 இலட்சம் கிலோமீற்றர் களுக்குச் சிறிதளவினால் வீழ்ச்சியடைந்தது. இதேபோன்று பயணிகள் கிலோ மீற்றர்களின் அளவும் 26,340 இலட்சம் கிலோமீற்றர்களுக்குச் சிறிதளவினால் வீழ்ச்சியடைந்தது. எனினும் சரக்குத் தொன் கிலோமீற்றர்களினால் குறித்துக் காட்டப்பட்டவாறு 1992 இல் சரக்குப் போக்குவரத்துப் பணிகள் 1,730 இலட்சம் சரக்குத்தொன் கிலோ மீற்றர்களாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 2 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் தொழிற்பட்ட கிலோமீற்றர்கள், பயணிகள் கிலோமீற்றர் ஆகிய இரண்டினதும் வீழ்ச்சிக்கு, வட்டவளை என்ற இடத்தில் புகைவண்டிப் பாதை புதையுண்டதன் விளைவாக 1992 யூலையிலிருந்து பிரதான வழியில் புகைவண்டிப் பணிகளில் ஏற் பட்ட தடைகளே பெருமளவு காணரமாக அமைந்தது. மேலதிகமாக முன்னைய ஆண்டைப் போலவே வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து நிலவுகின்ற அமைதியின்மையின் காரணமாக இப்பிரதேசங்களுக்கான பொதுவான புகை வண்டிப் பணிகளை மேற்கொள்வதிலிருந்தும் இலங்கைப் புகைவண்டிப் பகுதி தடைப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் குறைந்த தொழிற்பாட்டு அளவுகளில் பொதுவான பாதகமான தாக்கமானது நாட்டின் ஏனைய பாகங்களின் புகைவண்டிப் பணிகளில் காணப்பட்ட மேம் பாட்டின் காரணமாக ஓரளவு தணிக்கப்பட்டது. நீண்ட தூரப் புகைவண்டிகளுக்கு அதிக வசதிகளைக் கொண்ட பயணிகள் வண்டிகள் வழங்கப்பட்டமை அநுராத புரம், கண்டி ஆகிய இடங்களிலிருந்து மாத்தறைக்கான நேரடிப் புகைவண்டிப் பணி மேற்கொள்ளப்பட்டமை, புறநகர்ப் பகுதிகளுக்கான பணிக்குப் புதிய இயக்க வலு இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை, மருதானையிலிருந்து நுகேகொடை வரையிலான களனிப் பள்ளத்தாக்குப் புகைவண்டிப் பாதை விரி வாக்கப்பட்டமை போன்ற வழிமுறைகள் 1992 இல் இலங்கைப் புகைவண்டிப் பகுதிக்கான மக்கள் ஆதரவு மட்டத்தினை மேம்படுத்த உதவின. இதே வேளை யில் இவ்வாண்டுக் காலப் பகுதியில் சீமெந்து மற்றும் கோதுமை மா என்பவற்றைக் கொண்டு செல்வதற்கான சந்தையில் விரிவாக்கமொன்று காணப்பட்டது.

இந்த அபிவிருத்திகளின் விளைவாக, இவ்வாண்டுக் காலப் பகுதியில், ரூ. 8,710 இலட்சமாக விளங்கிய இலங்கை புகைவண்டிப் பகுதியின் மொத்த வருவாய் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இதே வேளையில் மொத்தச் செலவு சிறிதளவால் ரூ. 12,110 இலட் சத்திற்கு அதிகரித்தது. இந்த வருவாய்ச் செலவுப் பாய்ச்சல்களைப் பிரதிபலிக்கும் வகையில் இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் தொழிற்பாட்டு இழப்பு 1991 இன் ரூ. 3,910 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 3,400 இலட்சத்திற்கு வீழ்ச்சி யடைந்தது.

1992 இல் தனியார்துறையினால் வழங்கப்பட்ட பயணிகள் பணிகள் குறிப் பிடத்தக்களவில் மேலும் விரிவடைந்தன. உந்து ஊர்திப் போக்குவரத்துத் திணைக் களத்தில் புதிதாக பதிவு செய்யப்பட்ட பேருந்துகளின் மொத்த எண்ணிக்கை 1992 இல் 2,449 ஆகக் காணப்பட்டது. இதே வேளையில் வடக்கு கிழக்கு

தவிர்ந்த ஏனைய ஏழு மாகாண சபைகளின் தனியார் போக்குவரத்துத் திணைக் களங்கள், இவ்வாண்டில் தனியார் பேருந்துத் தொழிற்பாட்டாளர்களுக்கு மொத் தம் 3,253 புதிய பாதை வழி அனுமதிப் பத்திரங்களை வழங்கின. 1992 இறுதி யில் முற்றாகப் பயன்படுத்தப்பட்டிருந்த தேசிய அபிவிருத்தி வங்கியின் பேருந்துக் கொள்வனவுக் கடன் திட்டத்தின் ஊடாகப் பேருந்துகளைக் கொள்வனவு செய்வ தற்கான கடன் வசதிகள் கிடைக்கத் தக்கதாக இருந்தமை தனியார் பேருந்துப் போக்குவரத்து நடவடிக்கைகள் விரிவடைவதற்கு மேலும் வசதி செய்து கொடுத் தது. இந்தத் திட்டத்தின்கீழ் 1992 இறுதியில் 1,911 பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக மொத்தம் 1,816 கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. 1992 சனவரியிலிருந்து தொழிற்பாட்டிலிருந்த சிறிய நடுத்தரக் கைத்தொழில் (IV) கடன் திட்டத்தின்கீழ் பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கான மேலும் 94 கடன் களுக்கு தேசிய அபிவிருத்தி வங்கியில் ஒப்புதலளிக்கப்பட்டிருந்தது.

### வீடமைப்பு

15 இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டம் 1992 இல் அதனது மூன்றாவது ஆண்டை நிறைவு செய்வதோடு முன்னைய ஆண்டைவிடக் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பதிவு செய்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், புதிய வீடுகளை நிருமாணிப்பதற்கும் ஏற்கனவேயுள்ள வீடுகளைத் தரமுயர்த்துவதற்கும்

**அட்டவணை 1.26**

**போக்குவரத்துத்துறையின் அடிப்படைப் பண்புகள் 1991 – 1992**

| விடயம் | அலகு | 1991 | 1990 இற்கு மேலாக சதவீத மாற்றம் | 1992* | 1991 இற்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| **1. உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள்** | | | | | |
| 1.1 மக்கள்மயப்படுத்தப்பட்ட கம்பனிகளின் பேருந்துகள் ... | எண்ணிக்கைகள் | 189 | 142.3 | 30 | – 84.1 |
| 1.2 தனியார் பயணி வண்டிகள் ... | ,, | 2,987 | 178.9 | 2,449 | – 18.0 |
| 1.3 தனியார் ஊர்திகள்** ... | ,, | 15,076 | – 0.4 | 20,178 | 33.8 |
| 1.4 உந்து ஈருருளிகள் ... | ,, | 5,8643 | – 30.5 | 65,834 | 12.3 |
| 1.5 சரக்குகள் கொண்டு செல்வதற்கான ஊர்திகள் ... | ,, | 3,200 | 15.3 | 4,146 | 29.6 |
| 1.6 நில ஊர்திகள் ... | ,, | 4,003 | 49.8 | 5,487 | 37.1 |
| 1.7 ஏனையவைகள் ... | ,, | 76 | 28.8 | 134 | 76.3 |
| 1.8 தனியார் சொகுசு வண்டிகள் ... | ,, | 272 | 209.1 | 425 | 56,3 |
| **2. இலங்கை புகைவண்டிப் பகுதி** | | | | | |
| 2.1 தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் ... | ப. இ. | 7.6 | 4.1 | 7.5 | – 1.3 |
| 2.2 பயணிகள் கிலோ மீற்றர்கள் ... | ,, | 2,653.4 | – 4.6 | 2,633.7 | – 1.0 |
| 2.3 சரக்கு தொன் கிலோ மீற்றர்கள் ... | ,, | 169.1 | 3.2 | 173.2 | 2.4 |
| 2.4 மொத்த வருவாய் ... | ரூ. ப. இ. | 808 | 18.8 | 871 | 7.8 |
| 2.5 மொத்தச் செலவு ... | ,, | – 1,199 | 13.4 | 1,211 | 1.0 |
| 2.6 மிகை/குறை (+/—) ... | ,, | – 391 | 18.0 | – 340 | 13.0 |
| 3. மக்கள் மயமாக்கப்பட்ட கம்பனிகள் | | | | | |
| 3.1 தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் ... | ப.இ. | 247.0 | 0.7 | 268.1 | 8.5 |
| 3.2 பயணிகள் கிலோ மீற்றர்கள் ... | ,, | 11,454.0 | –14.1 | 12,840.0 | 12.1 |
| 3.3 மொத்த வருவாய் ... | ரூ. ப. இ. | 2,761.0 | 5.5 | 3,106.0 | 12.5 |

* தற்காலிகமானவை.

** இரட்டை நோக்கத்திற்கான ஊர்திகளையும் உள்ளடக்கும்

மூலங்கள்: இலங்கை புகைவண்டிப் பகுதி, உந்து ஊர்திகள் திணைக்களம். இலங்கைப் போக்குவரத்துச் சபையும், தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவும்

வறிய மக்களின் இருப்பிட நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் 6 ஆண்டுக் காலப் பகுதியொன்றினுள் 15 இலட்சம் குடும்பங்களுக்குக் கடன்களையும், கொடைகளையும் வழங்கி உதவி செய்வதற்காகப் பத்து துணை நிகழ்ச்சித் திட்டங்கள்* செயற்பாட்டில் உள்ளன.

கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், நகர வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் என்பனவற்றில் நேரடியாக ஈடுபட்டுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை 1992 இல் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டது. பதினைந்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் தனிப்பெரும் நிகழ்ச்சித் திட்டமான கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 38,457 குடும்பங்களுக்குக் கடன் வசதிகள் வழங்கப்பட்டதோடு இவ்வாண்டுக் காலப் பகுதியில் ரூ. 2,590 இலட்சம் கொண்ட கடன் பகிர்ந்தளிப்புக்களினால் மொத்தம் 23,022 வீடமைப்பு அலகுகள் பூர்த்தி செய்யப்பட்டன. நகர வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் நகர்ப்புற வறிய மக்களின் வீடுகளின் நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கில் மொத்தம் 6,016 குறைந்த வருமானக் குடும்பங்களுக்கு ரூ. 530 இலட்சம் கொண்ட கடன் வசதிகள் வழங்கப் பட்டன.1992 இல் நகர்ப்புறத் துறையின் உயர் மத்திய வகுப்பைச் சேர்ந்த குடும்பங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் விரிவாக்கப் பட்டது. இதன்படி, நகர்ப்புற (சிறப்பு) நடுத்தர வருவாய்க் குடும்பங்கள் என்ற பெயரிலான துணை நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 1992இல்கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் மொத்தம் 590 அலகுகள் முற்றுப்பெற்றன. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதி ரூ. 2,120 இலட்சமாகும்.

இவ்வாண்டில் இடர் வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் மிகச் சிறப் பான மேம்பாடொன்றினைக் காட்டியது. இத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை 17,014 குடும்பங்களை எய்தியதோடு 1992 இல் பயன்பெறுநர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன் களினதும் கொடைகளினதும் பெறுமதி ரூ. 1,590 இலட்சமாக விளங்கியது. இவ்வாண்டில் முற்றுப்பெற்ற அலகுகளின் எண்ணிக்கை 10,443 ஆக விளங்கிய தோடு இது இவ்வாண்டுக்கு இலக்கிடப்பட்ட எண்ணிக்கையையும் விஞ்சியிருந்தது.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட அபி விருத்திச் சபைகள் என்பனவற்றினால் செயற்படுத்தப்பட்ட பெருந்தோட்ட வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் இவ்வாண்டில் திருப்திகரமான முன் னேற்றத்தைக் காட்டியது. 1992 இல் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் 166 புதிய வீடுகளை முற்றுப்பெறச் செய்ய இயலுமாகக் காணப்பட்டவேளையில் 461 வீட்டு அலகுகள் தரமுயர்த்தப்பட்டன. இதேவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் 62 புதிய வீடுகளை முற்றுப்பெறச் செய்து 1,494 வீடு அலகுகளைத் தரமுயர்த்தியது. மேலதிகமாக ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையில் 3,739 வீடுகளுக்கும் இலங்கை

---

* பத்து துணைச் செவற்றிட்டங்களாவன: கிராமிய வீடமைப்பு துறை நிகழ்ச்சித் திட்டம் (கி.வீ.து.நி.தி.), நகர்ப்புற வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் (ந.வீ.து.நி.தி), இடர் வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் (இ.வீ.து.வி.கி.), மாகாண சபைகள் வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் (மா.ச.வீ.து.நி.தி.) மகாவலி வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் (ம.வீ.து.நி.தி.), பெருத்தோட்ட வீடமைப்பு துணை நிகழ்ச் சித் திட்டம் (பெ.வீ.து.நி.கி.), கூட்டுறவு வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் (கூ.வி.து.நி.தி), ஊழியர் வீடமைப் துணை நிகழ்ச்சித் திடடம் (ஊ.வீ.து.நி.தி.), தனியார் வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் (த.வீ.து.நி.தி.), தனியார் அபிவிருத்தியாளர்கள் துணை நிகழ்ச்சித் திட்டம் (த.அ.து.நி.தி.) என்பன வாகும்.

அட்டவணை 1.27

## பதினைந்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் செயலாற்றம் 1990—1992

| துணை நிகழ்ச்சித் திட்டம் | அடையப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | | | முற்றுப்பெற்ற அலகுகளின் எண்ணிக்கை | | | பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் பெறுமதி (ரூபா பத்து இலட்சம்) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1990 | 1991 | 1992 (அ) | 1990 | 1991 | 1992(அ) | 1990 | 1991 | 1992(அ) |
| கிராமிய வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் ... | 26,157 | 30,434 | 38,457 | 13,656 | 24,659 | 23,022 | 157.0 | 245.5 | 258.5 |
| நகர வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் | | | | | | | | | |
| குறைந்த வருமானக் குடும்பங்கள் ... | 5,377 | 5,808 | 6,016 | 2,954 | 5,627 | 3,509 | 32.6 | 50.3 | 53.1 |
| நகரச் (சிறப்பு) நடுத்தர வருமான குடும்பங்கள் ... | — | 16 | 590 | — | 16 | 590 | — | 222.7 | 211.9 |
| மாகாண சபை வீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டம் ... | 1,070 | 1,422 | 2,013 | 128 | 1,160 | 955 | 3.9 | 10.0 | 12.0 |
| இடர்வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் ... | 9,727 | 14,002 | 17,014 | 3,142 | 5,197 | 10,443 | 77.5 | 143.5 | 159.0 |
| பெருந்தோட்டவீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டம் (ஆ) ... | 121 | 313 | 228 | 121 | 313 | 228 | — | — | — |
| மகாவலி வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் ... | 9,751 | 4,721 | 3,505 | 4,129(இ) | 3,714(இ) | 5,968(இ) | 31.1(ஈ) | 15.8(ஈ) | 17.2(ஈ) |
| ஊழியர் வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் ... | 1,644 | 1,214 | 249(உ) | 130 | 145 | — | 34.7 | 260.5 | 3.6(உ) |
| மொத்தம் ... | 53,847 | 57,930 | 68,072 | 24,260 | 40,831 | 44,715 | 336.8 | 948.3 | 715.3 |

மூலங்கள் : தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை.
மகாவலி பொருளாதார முகவராண்மை.
மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமும்.

அ. தற்காலிகமானவை.

ஆ. மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை இலங்கை அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனம் என்பன மட்டும்.

இ. மகாவலி பொருளாதார முகவராண்மை தேசிய வீடமைப்பு மேலாண்மை சபை மற்றும் துணைக் குடும்பங்களால் பொறுப்பேற்கப்பட்ட சொந்தக் கட்டுமானம் என்பவற்றின் கீழ் முற்றுப்பெற்ற அலகுகள்.
**1990, 1991** இனைப் பொறுத்தமட்டில் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் கீழ் முற்றுப்பெற்ற அலகுகளையும் உள்ளடக்கும்.

ஈ. மகாவலி பொருளாதார முகவராண்மையினால் புதிய குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட அலகுகள்.

உ. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மட்டும்.

அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் 979 வீடுகளுக்கும் கழிவறை வசதிகள் வழங்கப்பட்டன. 1992 இல் மகாவலி பொருளாதார முகவராண்மை யானது மகாவலி வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முறை பி,சி,ஜி. மற்றும் எச் என்பனவற்றில் 5,968 வீட்டு அலகுகளை முற்றுப்பெறச் செய்து கணிசமான முன்னேற்றமொன்றினைக் கண்டது.

முன்னைய ஆண்டுகளைப் போலவே, தனியார்துறையின் வீடமைப்பு நட வடிக்கைகளைஅபிவிருத்தி செய்வதற்காக முக்கிய வங்கித்தொழில் மற்றும் நிதி நிறுவனங்கள் தமது கடன் திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொண்டன.இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என்பன பதினைந்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் தனியார்துறைக்கு நிதி வசதிகளை வழங்கிய முக்கிய அரசுடைமை நிதி நிறுவனங்களாகக் காணப்பட்டன. 1992 இல், வீடமைப்புக் கடன்களை வழங்கிய முதன்மைக் கடன் வழங்கும் நிறுவனமாக இலங்கை வங்கி விளங்கியது. வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 20 சத வீதத்தினால் 2,306 இற்கு அதிகரித்த வேளையில் கடன் பகிர்ந்தளிப்புக்கள் 3 சதவீதத்தினால் ரூ. 7,100 இலட்சத்திற்கு அதிகரித்தன. மக்கள் வங்கியும் 1991 இல் 11,507 விண்ணப்பதாரிகளுக்கு வழங்கிய ரூ. 3,840 இலட்சத்திற்கு எதிராக 12,983 தனிப்பட்டவர்களுக்கு வீடமைப்பு நோக்கங்களுக்காக ரூ. 5,140 இலட்சத்தை வழங்கியது. இதே வேளையில் அரச ஈட்டு முதலீட்டு வங்கி ரூ. 3,010 இலட்சம் கொண்ட 1,978 கடன்களைப் பகிர்ந்தளித்தது. இது முன்னைய ஆண்டைவிட 43 சதவீத அதிகரிப்பொன்றாகும். முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட ரூ. 660 இலட்சம் கொண்ட 565 கடன்களுடன் ஒப்பிடுகையில் ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் தேசிய சேமிப்பு வங்கி 728 விண்ணப்பதாரி களுக்கு ரூ. 970 இலட்சம் கொண்ட வீடமைப்புக் கடன்களை வழங்கியது. இதே வேளையில் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் 1,520 விண் ணப்பதாரிகளுக்கு ரூ. 1,000 இலட்சம் கொண்ட வீடமைப்புக் கடன்களைப் பகிர்ந்தளித்ததுடன் அதனது தொடக்கத்திலிருந்து தனிப்பட்ட ஆண்டொன்றிற் கான அதிகூடிய கடன் ஒப்புதல்களையும் பதிவுசெய்தது. மேலும் ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் கூட்டுறவு கிராமிய வங்கிகளும் சிக்கன கூட்டுறவுக் கடன் சங்கங்களும் தனியார்துறைக் கட்டுமான நடவடிக்கைகளுக்காக நிதி உதவிகளை வழங்கின.

**நகர அபிவிருத்தி**

நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நட வடிக்கைகள் 1992 இல் குறைவடைந்தன. நகர அபிவிருத்திக்கான மொத்த முதலீடு 1991 இன் ரூ. 11,840 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 3,380 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1991 இன் அதிகூடிய செலவு மட்டத்திற்கு சுகததாச உள்ளக விளையாட்டரங்கு செயற்றிட்டத்தின் கட்டுமான நடவடிக்கை களே பெருமளவு காரணமாகியது. மொத்தச் செலவில் ரூ. 1,240 இலட்சம் அல்லது மூன்றில் ஒரு பங்கிற்கு மேலான தொகை ஒருங்கிணைக்கப்பட்ட செயற் றிட்டங்களுக்காகச் செலவிடப்பட்டது. ஒருங்கிணைக்கப்பட்ட செயற்றிட்டங் களின் கீழ் பேலியகொடை என்ற இடத்தில் களஞ்சியக் கட்டிடத் தொகுதியின் கட்டுமானத்திற்காக ரூ. 860 இலட்சம் கொண்ட தொகையொன்று செலவிடப் பட்டது. வாடிக்கையாளர்களின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங் களுக்காக ரூ. 1,180 இலட்சம் கொண்ட மேலதிகத் தொகையொன்று செலவிடப்

பட்டது. இதே வேளையில் நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையின் காணி வங்கியினால் குறைவிருத்தியுடைய அல்லது பயன்படுத்தப்படாத காணிகளின் கொள்வனவுக்காக ரூ. 680 இலட்சம் கொண்ட தொகையொன்று செலவிடப் பட்டது.

**வீதிகளும் புகைவண்டிப் பாதைகளும்**

1992 இல் வீதி அபிவிருத்தி மேலாண்மைச் சபை அதனது வீதி வலையமைப்பை 276 கிலோமீற்றர்களினால் 10,855 கிலோமீற்றர்களுக்கு விரிவாக்கியது. வீதி அபிவிருத்தி மேலாண்மைச் சபை 3,760 பாலங்களின் பேணல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. இதே வேளையில் பாதைகளின் கட்டுமானத்திற்கான மொத்தச் செலவு ரூ. 12,360 இலட்சமாக அமைந்த வேளையில் பாதைகளின் பேணல் நடவடிக்கைகளுக்கான செலவு ரூ. 1,710 இலட்சமாக விளங்கியது.

ஆய்விற்குரிய ஆண்டுக் காலப் பகுதியில் வீதி அபிவிருத்தி மேலாண்மைச் சபை பாதைகளின் புத்தாக்கம் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளைத்தொடர்ந்து மேற்கொண்டது. அம்பேபுஸ்ஸ—குருநாகல்—திருகோணமலை பாதையினை அம்பேபுஸ்ஸ என்ற இடத்தில் இருந்து கபரணை என்ற இடம் வரையிலும், கண்டி-யாழ்ப்பாணப் பாதையினை மாத்தளையிலிருந்து கல்குலம என்ற இடத்துக்கும் கல்குலமவிலிருந்து அநுராதபுரம் வரையிலும் அபிவிருத்தி செய்வதையும் உள்ளடக்கிய ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட முதலாவது வீதி அபிவிருத்தி செயற்றிட்டத்தின் மீதான வேலைகள் 1992 இறுதியில் முற்றுப் பெற்றன. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட இரண்டாவது வீதி அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் 145 கிலோமீற்றர்களின் புத்தாக்க வேலை 1992 இலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. மேலதிகமாக ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் நிதியிடப்பட்ட மூன்றாவது பாதைச் செயற்றிட்டத்தின் கீழ் 176 கிலோமீற்றர் பாதைகளின் புத்தாக்கமும் தொடங்கப்பட்டது. இதே வேளையில், எகொடஉயன வழியாக மொரட்டுவைக்கும் பாணந்துறைக்கும் இடையிலான இருவழிப் பாதையின் நிருமாண வேலைகள் முற்றுப்பெற்ற வேளையில் களுத்துறைக்கும் கொழும்புக்கும் இடையில் ஏற்கனவே உள்ள பாதைக்கு மாற்றுப் பாதை ஒன்றை வழங்குவதற்கு வஸ்கடுவை—பண்டாரகமை—கெஸ்பேவ பாதை மீதான மேம்பாட்டு வேலைகள் 1992 இல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

முன்னைய ஆண்டைப்போலவே 1992 இல் புகைவண்டிப் பாதை கிலோமீற்றர்களின் அளவு 1944 கிலோமீற்றர்களில் மாறாது காணப்பட்டது. எனினும், காலியிலிருந்து கண்டி வரையிலும் இராகமையிலிருந்து நீர்கொழும்பு வரையிலும் புகைவண்டிப் பாதைகளின் புத்தாக்கத்துக்கான சில ஆரம்ப நடவடிக்கைகள் முற்றுப் பெற்றுள்ளன. இதே வேளையில் நுகேகொடையிலிருந்து கோமாகம வரையில் களனிப் பள்ளத்தாக்குப் புகைவண்டிப் பாதை அகலமாக்கலின் 11 ஆவது கட்டம் 1992 இல் தொடங்கப்பட்டது.

**தொடர்பூட்டல் பணிகள்**

இயலளவு மற்றும் நாட்டுக்கு வழங்கப்பட்ட பணிகள் ஆகியவற்றின் நியதிகளில் 1992 இல் அஞ்சல், தொலைத் தொடர்புகள் துறை மிதமான மேம்பாடொன்றினையே பதிவு செய்தது.

அஞ்சல் அலுவலக அமைப்பு முன்னைய ஆண்டின் 3,982 இலிருந்து 1992 இல் 4,018 இற்கு விரிவடைந்தது. இதன்படி அஞ்சல் அலுவலகம் ஒன்றினால் வசதிகள் வழங்கப்பட்ட பிரதேசம் 1991 இன் 16.5 சதுர கிலோ மீற்றர்களிலிருந்து 1992 இல் 16.3 சதுர கிலோமீற்றர்களுக்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்து பொது மக்களுக்குக் கிடைக்கத்தக்கதாக இருந்த அஞ்சல் பணி களில் சிறிதளவு மேம்பாட்டைக் காட்டியது. இதே வேளையில் ஒவ்வொரு வதிவோருக்குமான கடிதங்களின் சராசரி எண்ணிக்கை 1991 இன் 28 இலிருந்து 1992 இல் 25 இற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. ஆய்விற்குரிய காலப் பகுதியில் அஞ்சல் திணைக்களத்தினால் கையாளப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை 1991 இன் 5,180 இலட்சத்திலிருந்து 4,690 இலட்சத்திற்கு 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1992 இல் உள்நாட்டு அஞ்சல் கையாளல் 11 சதவீதத்தினால் 3,980 இலட்சத்துக்கு வீழ்ச்சியடைந்தமையே இதற்கான பெருமளவு காரணமாக அமைந்தது. இவ்வாண்டில் வெளிநாட்டு அஞ்சல் கையாளலும் சிறிதளவால் 700 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதே வேளையில் உள்நாட்டு வெளிநாட்டு இருவகைப் பொதிகளினதும் கையாளல் முறையே 1 சதவீதத்தினாலும் 3 சத வீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தது.

இலங்கைத் தொலைத் தொடர்புத் திணைக்கத்தின் தொழிற்பாடுகளைக் கையேற்ற சிறிலங்கா ரெலிகொம் ஆய்விற்குரிய காலப் பகுதியில் மேம்பட்ட செயலாற்றத்தைக் காட்டியது. விரிவாக்கல், தரமுயர்த்தல் ஏற்கனவே யுள்ள தொலைத் தொடர்பு அமைப்பினைப் புத்தாக்கம் செய்தல் என்பனவற்றை நோக்கமாகக் கொண்டு பல பாரிய அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் 1992 இல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாண்டில் நடைபெற்றுக் கொண் டிருந்த பாரிய திட்டங்களாவன தொலைத் தொடர்புப் பணிகளின் பொது அபி விருத்தி, உலகளாவிய வர்த்தகத் தொலைத் தொடர்பு துணைக்கோள் முறைக் கான மூலதன உதவுதொகை, கரைகடந்த தொலைத் தொடர்புப்பணி, தென் கிழக்காசிய மத்திய கிழக்கு மேற்கு ஐரோப்பிய கடற்கீழ் கம்பி செயற்றிட்டம், மாத்தறை மாவட்டத் தொலைத் தொடர்பு அமைப்பு அபிவிருத்தி, பன்னாட்டு தொலைபேசி தொடர்பு நிலையம் மற்றும் தரைநிலைய நெடுந்தூர தொலைக் கடத்தி வலையமைப்பு என்பனவற்றைக் கொண்ட தொலைத் தொடர்பு செயற் றிட்டங்கள் என்பனவாம்.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த முதன்மை அபிவிருத்தி நடவடிக்கை களுக்கு மேலதிகமாக, உடனடிக் கேள்வியை எதிர்கொள்வதற்காகவும் பணிகளின் தரத்தினை உயர்த்துவதற்காகவும் பல இடைக்கால செயற்றிட்டங்கள் இனங் காணப்பட்டு விரைவுபடுத்தப்பட்ட அடிப்படையொன்றில் திட்டமிடப்பட்டுள் ளன. இதன்படி 8,000 மேலதிக தொடர்புகளைக் கொண்ட புதிய எண் அடிப் படையிலான கூறு பரிவர்த்தனை நிலையமொன்று நுகேகொடை என்னுமிடத்தில் நிறுவப்படுகின்றது. ''கொழும்பு துரித நிகழ்ச்சித் திட்டத்தின்'' கீழ் கவ்லொக் ரவுண், கோட்டை, இரத்மலானை மற்றும் மொறட்டுவை ஆகிய இடங்களில் உள்ள பரிவர்த்தனை நிலையங்களின் இயலளவை மேம்படுத்துவதற்கான வேலைகள் முன்னேறிக் கொண்டிருந்தன. மேலதிகமாக நேரடித் தொடர்பு வசதிகளைக் கொண்ட பல பரிவர்த்தனை நிலையங்கள் நாட்டின் பல நகரங்களில் நிறுவப்பட்டு செயற்படுத்தப்பட்டன. இதே வேளையில் இவ்வாண்டில் சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் ''செலுலர் நடமாடும் வலைய அமைப்பு முறை'' ஒன்றினை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு இலங்கை யில் முதன் முறையாக தொலைபேசி அட்டை முறையொன்றும் அறிமுகப் படுத்தப்பட்டது.

அட்டவணை 1.28

## அஞ்சல் தொலைத் தொடர்புப் பணிகளின் வளர்ச்சி 1989—1992

| விடயம் | 1989 | 1990 | 1991 | 1992* |
|---|---|---|---|---|
| **1. அஞ்சல் பணிகள்** | | | | |
| 1.1 அஞ்சல் வழங்கும் பரப்புக்களின் எண்ணிக்கை ... ... ... ... | 6,630 | 6,636 | 6,729 | 6,729 |
| 1.2 அஞ்சல் நிலைய பணிக்குட்பட்ட பரப்பு (ச.கி.மீ.) ... ... ... ... | 16.8 | 16.6 | 16.5 | 16.3 |
| 1.3 அஞ்சல் நிலையங்களின் மொத்த எண்ணிக்கை ... ... ... ... | 3,908 | 3,945 | 3,982 | 4,018 |
| 1.3.1 அரசு ... ... ... ... ... | 3,841 | 3,864 | 3,884 | 3,891 |
| 1.3.2 தனியார் ... ... ... ... | 67 | 81 | 98 | 127 |
| 1.4 ஒரு அஞ்சல் நிலையத்தின் பணிக்குட்பட்ட மக்கள் தொகை ... ... ... | 4,300 | 4,307 | 4,331 | 4,331 |
| 1.5 குடியிருப்பாளரொருவருக்கு கிடைக்கும் கடிதங்களின் எண்ணிக்கை ... ... | 28 | 29 | 28 | 25 |
| **2. தொலைத் தொடர்புப் பணி** | | | | |
| 2.1 உள்நாட்டுத் தொலைபேசிப் பணி | | | | |
| 2.1.1 தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கை ... ... ... | 105,007 | 121,388 | 125,834 | 135,398 |
| 2.1.2 வழங்கப்பட்ட புதிய தொலைபேசி இணைப்புக்கள் ... ... ... | 6,087 | 20,226 | 6,579 | 10,607 |
| 2.1.3 இணைப்புக்களை எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை ... ... | 48,400 | 47,945 | 61,313 | 96,207 |
| 2.1.4 தொலைபேசிக்கான கேள்வி (எண்ணிக்கை) ... ... ... | 153,407 | 169,333 | 187,147 | 231,605 |
| 2.1.5 தொலைபேசிகளின் பரம்பல் (ஒவ்வொரு 100 ஆட்களுக்கான தொலைபேசி) ... ... | 0.62 | 0.71 | 0.73 | 0.78 |
| 2.2 கடல் கடந்த தொலைத் தொடர்புப் பணி | | | | |
| 2.2.1 ரெலெக்ஸ் இணைப்புக்களின் எண்ணிக்கை ... ... ... | 1,591 | 1,666 | 1,740 | 1,583 |
| 2.2.2 எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை ... ... ... | 59 | 89 | 84 | 103 |
| 2.2.3 வெளிச் செல்லும் பணிகள் (எண்ணிக்கை) | | | | |
| 2.2.3.1 வெளிநாட்டு தொலைபேசி போக்குவரத்து (அ) ... ... ... | 8,038,000 | 9,006,000 | 14,624,355 | 17,883,482 |
| 2.2.3.2 வெளிநாட்டுத் தந்திகள் (ஆ) ... ... ... ... | 3,023,000 | 2,720,000 | 2,348,803 | 2,497,552 |
| 2.2.3.3 வெளிநாட்டு ரெலெக்ஸ் போக்குவரத்து (அ) ... ... ... | 4,777,000 | 4,472,122 | 4,140,000 | 4,241,929 |

(அ) எண் தொகைகள் நிமிடங்களின் எண்ணிக்கைகளில் தரப்பட்டுள்ளன.
(ஆ) எண் தொகைகள் சொற்களின் எண்ணிக்கைகளிற் தரப்பட்டுள்ளன.
* தற்காலிகமானவை,

மூலங்கள்: அஞ்சல் திணைக்களம்
சிறிலங்கா ரெலிகொம்

ஆய்விற்குரிய காலப் பகுதியில் தொலைத் தொடர்பு வசதிகளுக்கான கேள்வி மேலும் தொடர்ந்து அதிகரித்தது. வசதிகளைப் பெறவுள்ளோரின் பட்டியலில் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை 58 சதவீதத்தினால் 96,207 இற்கு அதிகரித்தபோதிலும் 1992 இல் சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் 10,607 புதிய இணைப்புக்கள் மட்டுமே வழங்க இயலுமாக இருந்தது. எனினும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1992 இல் வழங்கப்பட்ட புதிய இணைப்புக்களின் எண்ணிக்கை 4,028 இனால் விரிவடைந்தது. இதன்படி பொது மக்களுக்கு வழங்கப்பட்ட தொலைபேசிகளின் மொத்த எண்ணிக்கை 8 சதவீதத்தினால் 135,398 இற்கு அதிகரித்தது. இதே வேளையில் ஆய்விற்குரிய காலப் பகுதியில் கரைகடந்த தொலைபேசித் தொடர்புகள் 22 சதவீதத்தினால் விரிவடைந்த வேளையில் கரைகடந்த தந்தி மற்றும் ரெலெக்ஸ் தொடர்புகள் முறையே 6 சதவீதத்தினாலும், 2 சதவீதத்தினாலும் அதிகரித்தன. எனினும் வழங்கப்பட்ட ரெலெக்ஸ் இணைப்புக்களின் எண்ணிக்கை 1992 இல் 9 சதவீதத்தினால் 1,583 இற்கு வீழ்ச்சியடைந்தது.

**சனசக்தி நிகழ்ச்சித் திட்டம்**

1992 பெப்புருவரியில் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளில் அதனது 3 வது சுற்று நடவடிக்கைகளின் ஆரம்பத்துடன் சனசக்தி நிகழ்ச்சித் திட்டம் மேலும் 101,882 குடும்பங்களை எய்தியது. 22 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 103,664 குடும்பங்களை உள்ளடக்கி 1990 திசெம்பரில் தனது இரண்டாவது சுற்றைத் தொடங்கிய சனசக்தி நிகழ்ச்சித் திட்டம் 1992 திசெம்பரில் அதனது நுகர்வு உதவித் திட்டத்தை முற்றுப்பெறச் செய்தது. 1991 செத்தெம்பரில் தனது செயற்பாட்டினை முற்றுப்பெறச் செய்த சனசக்தி முதலாவது சுற்று 28 பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஏற்கனவே 121,000 குடும்பங்களை எய்தியிருந்தது. இதன்படி, இந்த மூன்று சுற்றுக்களின் கீழுமான நிகழ்ச்சித் திட்டத்தினால் இதுவரை மொத்தம் 326,546 குடும்பங்கள் நன்மையடைந்துள்ளன.

ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில், நிகழ்ச்சித் திட்டத்தின் தொடக்கத்தில் எதிர்பார்க்கப்பட்டதுபோல், முதற் சுற்று நன்மை பெறுநர்கள் மூலதனத் தேவைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ள இயலுமாகக் காணப்பட்டனர். இதன்படி 1991 இன் இறுதியில் மாதமொன்றுக்குக் குடும்பமொன்றுக்கு ரூ. 1,458 என்ற வீதத்தில் நுகர்வு நன்மை பெறல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட மொத்தம் 121,000 குடும்பங்களுக்கு 1992 செத்தெம்பரில் ரூ. 25,000 முகப்புப் பெறுமதியைக் கொண்ட மூலதன உரித்துச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்தச் சான்றிதழானது அதனைப் பெற்றுக்கொள்வோருக்கு ரூ. 25,000 கொண்ட மூலதன அடிப்படையொன்றைப் பெற்றுக்கொள்ள உதவி செய்யும். சுயதொழில் செயற்திட்டமொன்றுக்கு வங்கியொன்றிலிருந்து ரூ. 25,000 த்தினைக் கடனாகப் பெற்றுக்கொள்ள இந்தச் சான்றிதழைப் பிணையாக வைப்புச் செய்யலாம். ஒவ்வொரு நன்மைபெறுநரும் தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து மாதமொன்றுக்கு ரூ. 250 வட்டியைப் பெற்றுக்கொள்ளுவதை இந்தச் சான்றிதழ் உறுதி செய்தது.

சனசக்தித் திட்டத்தின் இரண்டாம் மூன்றாம் சுற்றுக்களில் சனசக்தி நன்மை பெறுவோருக்கு நுகர்வு உதவியை வழங்குவதற்கான மொத்தச் செலவு 1992 இல் ரூ. 30,960 இலட்சமாக விளங்கியது. அதனது தொடக்கத்திலிருந்து 1992 திசெம்பர் இறுதிவரை வறிய மக்களுக்கான நுகர்வு உதவியினை வழங்குவதற்காக சனசக்தி நிகழ்ச்சித் திட்டம் ரூ. 101,130 இலட்சம் கொண்ட தொகை ஒன்றினை

வழிப்படுத்தியுள்ளது. இதேவேளையில், 1992 இறுதியில் நுகர்வு உதவித் தொகையிலிருந்து உருவாக்கப்பட்ட ஒன்று திரண்ட மொத்தச் சேமிப்பு ரூ. 19,860 இலட்சமாக விளங்கியது.

சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முயற்சிகள் புதிய தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கத்தின் மூலமாக வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினைத் உயர்த்துவதற்கு உதவியுள்ளன. 1991 செத்தெம்பரில் முடிவடைந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது சுற்று 100,475 குடும்பங்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்கிய வேளையில் 1992 திசெம்பரில் முடிவடைந்த இரண்டாவது சுற்று மொத்தம் 58,749 ஆட்களுக்கு அத்தகைய வசதிகளை வழங்கியுள்ளது. இத்தகைய தொழில் வாய்ப்பு வசதிகள் வேளாண்மை, மீன்பிடித் தொழில், தயாரிப்புக் கைத்தொழில்கள், வர்த்தகம், வாணிபம் ஆகிய பல்வேறுபட்ட துறைகளில் உருவாக்கப்பட்டுள்ளன.

தொடக்கத்திலிருந்தே, சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து நன்மை பெறுவோருக்கு, நிலைத்து நிற்கும் அடிப்படையில் வருவாய் உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக கணிசமானளவு கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது சுற்றின் கீழ் ரூ. 6,250 இலட்சம் பெறுமதி கொண்ட மொத்தம் 73,103 கடன்கள் வழங்கப்பட்ட வேளையில் இரண்டாவது சுற்றில் ரூ. 3,220 இலட்சம் பெறுமதி கொண்ட மொத்தம் 33,820 கடன்கள் வழங்கப்பட்டன. இதேவேளையில், 3 வது சுற்றின் கீழ் 13,153 சனசக்தி நிகழ்ச்சித்திட்ட நன்மைபெறுநருக்கு ரூ. 850 இலட்சம் பெறுமதி கொண்ட கடன் வசதிகள் வழங்கப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட கடன் வசதிகளை வழங்கிய முக்கிய நிதி நிறுவனங்களாக இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் என்பன விளங்கின. மேலதிகமாக 1991 இல் நிறுவப்பட்ட சனசக்தி நம்பிக்கை நிதியம் சனசக்தி நிகழ்ச்சித்திட்ட நன்மை பெறுநருக்கு நிதியியல் வசதிகளை வழங்குவதில் முக்கிய பங்கொன்றினை வகித்தது. 1992 இல், சனசக்தி நம்பிக்கை நிதியமானது சமூக அபிவிருத்தி, போசாக்கு மேம்பாடு, மனிதவள மற்றும் நிறுவன அபிவிருத்தி, கடன் வசதிகளுக்கான ஏற்பாடுகள் என்பனவற்றிற்காக ரூ. 740 இலட்சத்தினைச் செலவிட்டது.

## நலத்துறை

நலத்துறைப் பணிகள் மீதான மொத்தச் செலவினம் 1991 இன் ரூ. 52,300 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 65,910 இலட்சத்திற்கு அதிகரித்தது. இது முன்னைய ஆண்டைவிட 26 சதவீத அதிகரிப்பாகும். இதன்படி மொத்த அரச செலவினத்தின் அதனது பங்கு 1991 இன் 4.5 சதவீதத்திலிருந்து 1992 இல் 5.3 சதவீதத்திற்கு அதிகரித்தது 1992 இல் நலத்துறை மீதான நடைமுறைச் செலவினம் 11 சதவீதத்தினால் ரூ. 45,710 இலட்சத்திற்கு அதிகரித்தவேளையில் மூலதனச் செலவினம் 81 சதவீதத்தினால் ரூ. 20,200 இலட்சத்திற்கு அதிகரித்தது.

ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில், சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பணிக் குழுவொன்றினால் தேசிய நலத்துறைக் கொள்கை உருவாக்கப்பட்டதோடு இக் கொள்கையானது 2000 ஆம் ஆண்டளவில் அடையக் கூடிய அளவிடத்தக்க சில குறிக்கோள்களையும் நோக்குகளையும் குறிப்பிடுகின்றது. இதன்படி நலத் துறைக் கொள்கையின் முக்கிய திணிப்பானது நலத்துறை மேம்பாடும் தடுப்பும்,

அட்டவணை 1.29

## நலத்துறைப் பணிகள் 1988–1992

| விடயம் | 1988 | 1989 | 1990 | 1991 | 1992* |
|---|---|---|---|---|---|
| 1. மருத்துவ மனைகள் (மேற்கத்தைய மருந்து கையாள்பவை) ... ... | 498 | 502 | 502 | 504 | 504 |
| 2. படுக்கைகள் ... ... | 45,406 | 46,620 | 42,079(ஆ) | 42,437(ஆ) | வி.கி. |
| 3. மத்திய மருந்தகங்கள் ... ... | 350 | 361 | 278(ஆ) | 275(ஆ) | 275(ஆ) |
| 4. மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கை ... | 2,316 | 2,456 | 2,440(அ) | 2,934 | 2,824 |
| 5. துணை மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கை ... ... | 1,100 | 1,193 | 1,074(அ) | 1,201 | 1,265 |
| 6. ஆயுர்வேத மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கை ... ... | 12,957 | 13,076 | 13,284 | 12,852 | 13,131 |
| 7. மருத்துவப் பணிப் பெண்களின் மொத்த எண்ணிக்கை ... | 8,317 | 9,486 | 8,957(அ) | 9,934 | 10,589 |
| 8. உதவி பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை ... ... | 6,019 | 6,030 | 5,707 | 5,697 | வி.கி. |
| 9. உள் பிணியாளர்களின் எண்ணிக்கை ('000) ... ... | 2,543 | 2,525 | 2,533(ஆ) | 2,629(ஆ) | வி.கி. |
| 10. வெளிப் பிணியாளர்களின் எண்ணிக்கை ('000) ... ... | 31,407 | 31,781 | 28,401(ஆ) | 28,575(ஆ) | வி.கி. |
| 11. நடைமுறைச் செலவு (ப.இ.ரூ.) ... ... | 2,427 | 3,381 | 3,685 | 4,110 | 4,571 |
| 12. மொத்த நலத்துறை செலவு (ப.இ.ரூ.) ... | 3,931 | 4,639 | 4,963 | 5,230 | 6,591 |

மூலங்கள் : நலத்துறை மகளிர் அலுவல்கள் அமைச்சு
சுதேச மருத்துவ அமைச்சு
இலங்கை மத்திய வங்கி.

* தற்காலிகமானவை.
(ஆ) வட மாகாணம் நீங்கலாக.
(அ) வடக்கு, கிழக்கு மாகாணங்கள் நீங்கலாக.

ஏற்கனவே உள்ள பணிகளின் தரத்தினையும் வீச்சினையும் உறுதிப்படுத்துதல், நலத்துறைப் பணிகளைப் பன்முகப்படுத்தல் என்பனவற்றை மையமாகக் கொண் டுள்ளது. இதேவேளையில் நலத்துறை உள்ளமைப்பு மீதான முதலீடுகள் இவ் வாண்டுப் பகுதியில் மேலும் விரிவடைந்தன. பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு/ உலக வங்கி என்பனவற்றினால் நிதியிடப்பட்ட நலம் மற்றும் குடும்பக் கட்டுப் பாட்டுச் செயற்றிட்டத்தின் கீழ் 63 கிராமோதய நல நிலையங்கள், பல வைத்திய சாலை மருந்துக் களஞ்சியங்கள் மற்றும் பிரதேச நல நிலையங்கள் என்பன கட்டப்பட்டன. நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர்க் குழாய்களின் பொருத்தல் இராகமப் பிரிவுக்கான நோயாளர் அறைக் கட்டிடத்தொகுதி கட்டுமானம் என்பனவற்றை உள்ளடக்கிய கொழும்பு பெரிய வைத்தியசாலை அபிவிருத்திச் செயற்றிட்டம் (கட்டம் 11) 1992 காலப் பகுதியில் தொடங்கியது. இதேவேளை யில், யப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகவராண்மையால் நிதியிடப்பட்ட உயிரியல்– வைத்திய பொறியியற் பணிகள் பிரிவின் புத்தாக்கம் தொடர்பான வேலைகள் 1992 மேயில் தொடங்கப்பட்டன.

1992 இல் சுதேச வைத்திய முறையினை விரிவாக்குவதற்கான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கண் சிகிச்சை, பாம்புக்கடி மற்றும் எரி காயங்கள், சுடுகாயங்கள் என்பனவற்றிற்கான சிறப்புச் சிகிச்சைப் பிரிவுகளை நடாத்துதல், தனியான யூனானி மற்றும் துளையூசி மருத்துவப் பிரிவுகளை நிறுவுதல் போன்ற நடவடிக்கைகளினால் பொரளை வைத்தியசாலையினால் வழங்கப்பட்ட பணிகள் விரிவாக்கப்பட்டன. கல்துமுல்லை, கிராந்துருக்கோட்டை பட்டிப்பொலை ஆகிய இடங்களில் மருந்து மூலிகைகளின் பயிரிடல் மேலும் விரிவாக்கப்பட்டன.

1992 இல் மொத்தமாக 137 ஆயுர்வேத வைத்தியசாலைகளும் மத்திய மருந்தகங்களும் 15 இலட்சம் வெளி நோயாளர்களுக்கும் 17,685 உள்ளக நோயாளர்களுக்கும் மருத்துவ வசதிகளை வழங்கியது. இத்துடன் உள்ளூராட்சி மன்றங்களினால் நடாத்தப்படும் 235 இலவச மருந்தகங்களில் மொத்தமாக 747,963 நோயாளர்கள் சிகிச்சை அளிக்கப்பட்டனர்.

**கல்வி**

1992 இல் கல்விக்கான மொத்த அரச செலவினம் 1991 இன் ரூ. 91,290 இலட்சத்திலிருந்து 6 சதவீதத்தினால் ரூ. 96,640 இலட்சத்திற்கு அதிகரித்தது. எனினும் 1992 இல், மொத்த அரசின் செலவில் இதன் பங்கு தொடர்ந்து 7.8 சதவீதமாக மாறாது விளங்கியது. 1992 இல் ரூ. 20,070 இலட்சமாக விளங்கிய கல்வி மீதான மூலதனச் செலவினம் 70 சதவீதமான அதிகரிப்பினைப் பதிவு செய்த வேளையில் 1992 இல் நடைமுறைச் செலவினம் 4 சதவீதத்தினால் ரூ. 76,570 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பின்னையது இலவசப் பாடப்புத்தகங்கள், மதிய உணவு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பாடசாலைப் பருவச்சீட்டுக்கள் என்பனவற்றிற்காகச் செலவிடப்பட்ட ரூ. 18,900 இலட்சம் கொண்ட தொகையையும் உள்ளடக்கியிருந்தது. பாடசாலைப் பிள்ளைகளின் போசாக்கின்மையைக் குறைக்கும் நோக்கில் மதிய உணவு நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்ட வேளையில் இலவசப் பாடப்புத்தகங்களின் வழங்கலானது பள்ளிச் சிறார்களின் தினசரி வருகையினை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. இவ்விரு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழும் 1992 இல், 10,588 பாடசாலைகளில் மொத்தம் 43 இலட்சம் சிறார்கள் நன்மையடைந்தனர்.

1992 இல் பொதுக் கல்வியின் கீழான பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை 1991 இன் 10,520 இலிருந்து 10,588 இற்கு அதிகரித்தது. மாணவர்களின் மொத்த எண்ணிக்கையும் 1991 இன் 4,258,697 இலிருந்து 1992 இல் 4,284,166 இற்கு அதிகரித்தது. எனினும், பாடசாலை ஒன்றிற்கான மாணவர்களின் எண்ணிக்கை 1992 இல் 405 ஆக மாற்றமின்றியிருந்தது. இதே வேளை, எல்லாப் பாடசாலைகளிலுமுள்ள ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை 1992 இல் 5,366 இனால் 182,597 இற்கு அதிகரித்தது. இதன் விளைவாக எல்லாப் பாடசாலைகளினதும் மாணவ ஆசிரிய விகிதாசாரம் 1991 இன் 24.2 இலிருந்து 1992 இல் 23.7 இற்கு உயர்வடைந்தது.

ஆய்விற்குரிய காலப் பகுதியில் கல்வி நிருவாகத்தைப் பன்முகப்படுத்தி வலுப்படுத்துவதற்காக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நிருவாகத்தை மக்களிடம் கொண்டு செல்லல் என்ற கோட்பாட்டிற்கு இசைவாக பிரதேச செயலகப் பிரிவுகளுடன் இணைய வரையறுக்கப்படும் வகையில் கல்விப் பிரிவு

அட்டவணை 1.30

**பொதுக் கல்வி 1988—1992**

| விடயம் | | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 * |
|---|---|---|---|---|---|---|
| 1. பள்ளிக்கூடங்களின் மொத்த எண்ணிக்கை | ... | 10,261 | 10,296 | 10,382 | 10,520 | 10,588 |
| 1.1 அரச பள்ளிக்கூடங்களின் மொத்த எண்ணிக்கை | ... | 9,771 | 9,805 | 9,864 | 9,998 | 10,042 |
| 1.2 ஏனைய பள்ளிக்கூடங்கள் | ... | 490 | 491 | 518 | 522 | 546 |
| 2. மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | ... | 4,058,843 | 4,179,520 | 4,232,356 | 4,258,697 | 4,284,166 |
| 2.1 அரச பள்ளிக்கூடங்கள் | ... | 3,938,062 | 4,057,815 | 4,111,272 | 4,135,114 | 4,155,035 |
| 2.2 ஏனைய பள்ளிக்கூடங்கள் | ... | 120,781 | 121,705 | 121,084 | 123,583 | 129,131 |
| 3. புதிதாக அனுமதிக்கப்பட்டோர் | ... | 394,960 | 396,748 | 387,314 | 388,315 | 358,808 |
| 4. ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை | ... | 146,334 | 153,243 | 184,822 | 177,231 | 182,597 |
| 4.1 அரச ஆசிரியர்கள் | ... | 140,061 | 146,997 | 178,333 | 170,735 | 175,682 |
| 4.2 ஏனையோர் | ... | 6,273 | 6,246 | 6,489 | 6,496 | 6,915 |
| 5. மாணவர்/ஆசிரியர் விகிதம் | ... | 27.74 | 27.27 | 22.89 | 24.03 | 23.46 |
| 6. பொதுக் கல்வி மீதான நடைமுறைச் செலவினங்கள் (ரூ.ப.இ.) | ... | 5,371 | 6,612 | 8,529 | 7,951 | 7,657 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள்: கல்வி, உயர் கல்வி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

களின் எல்லை மீண்டும் வரையறுக்கப்பட்டது. 1992 திசெம்பர் இறுதியில் மொத்தமாக 272 புதிய கல்வி அலுவலகங்கள் நிறுவப்பட்டன. சமூகத்தின் பயன்தரு பங்கேற்பினூடாக பாடசாலை நிருவாகத்தை வலுப்படுத்தும் நோக்கில் பாடசாலை அபிவிருத்திச் சபைகளை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 1992 இறுதியில் மொத்தமாக 9,962 சபைகள் நிறுவப்பட்டிருந்தன. இதேவேளையில் கிராமிய பாடசாலை அமைப்பு முறையினை உறுதிப்படுததும் நோக்கில் ஆரம்பப் பாடசாலை அபிவிருத்திச் செயற்றிட்டம், பொதுக் கல்வி செயற்றிட்டம் பெருந்தோட்டப் பாடசாலை கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டம் ஆகிய மூன்று முக்கிய செயற்றிட்டங்கள் வெளிநாட்டு உதவியுடன் ஆய்விற்குரிய ஆண்டில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன.

**மகாவலி நிகழ்ச்சித் திட்டம்***

மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் செயல் எல்லைக்குள் வரும் பல தரப்பட்ட முறைகளின்கீழ் வேளாண்மை மற்றும் வேளாண்மையல்லா குடும்பங்களைக் குடியமர்த்தல் தொடர்பான வேலைகளும் சமூக உள்ளமைப்புத் தொடர்பான

* இலங்கை மகாவலி மேலாண்மைச் சபையிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலானது.

வேலைகளும் மற்றும் வேளாண்மை நடவடிக்கைகளும் 1992 இலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. 1992 இல் மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மொத்தச் செலவு ரூ. 22,320 இலட்சமாக விளங்கியது. இது ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் 82 சதவீதத்திற்கு வகை கூறியது. இவ்வாண்டின் மொத்தச் செலவில் 52 சதவீதம் அல்லது ரூ. 11,520 இலட்சம் முறைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்டது: முறை 'பி' (ரூ. 3,650 இலட்சம்), முறை 'சி' (ரூ. 5,640 இலட்சம்), முறை 'ஜி' (ரூ. 90 இலட்சம்), முறை 'எச்' (ரூ. 1,220 இலட்சம்), முறை 'எல்' (ரூ. 920 இலட்சம்).

1992 இல் மகாவலி செயற்றிட்டத்தின் கீழ்வரும் ஆறு நீர் மின்வலுச் செயற்றிட்டங்களினதும் மொத்த மின்வலு உருவாக்கம் 1,559 கிகாவாட் மணித்தியாலங்களாகும். இது முன்னைய ஆண்டில் இப்பொறிகளினால் உருவாக்கப்பட்ட மொத்த மின்வலுவைவிட 2 சதவீதம் உயர்வானதாகும். 1992 இல் கொத்மலை, விக்டோரியா என்பனவற்றினால் உருவாக்கப்பட்ட மின்வலு முறையே 38 சதவீதத்தாலும், 22 சதவீதத்தாலும் 480 கிகாவாட் மணித்தியாலங்களுக்கும் 588 கிகாவாட் மணித்தியாலங்களுக்கும் அதிகரித்திருக்கையில், ரன்தெனிகல, ரன்தம்பே, உக்குவெல என்பனவற்றினால் உருவாக்கப்பட்ட மின்வலு முறையே 30 சதவீதத்தாலும், 26 சதவீதத்தாலும், 11 சதவீதத்தாலும் முறையே 193 கிவாம, 126 கிவாம, 172 கிவாம இற்கும் வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டில் போவத்தன்ன நீர் மின் உற்பத்திப் பொறியினால் வலு எதுவும் உருவாக்கப்படவில்லை. 1992 இல் மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மொத்த வலு தேசிய வலு வழங்கலில் 44 சதவீதத்திற்கு வகை கூறியது.

1992 இல் மகாவலி அதிகாரப் பிரதேசத்தின் கீழ் பயிர் செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 15 சதவீதத்தினால் 100,653 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. 1991/92 பெரும்போகத்தில் பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு முன்னைய பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் 1 சதவீதத்தினால் 68,947 எக்டேயர்களுக்கு அதிகரித்த வேளையில் கடந்த மூன்றாண்டுகளாக உறுதியாக அதிகரிப்பைக் கொண்டிருந்த பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பானது 1992 சிறுபோகத்தில் 37 சதவீதத்தால் 31,706 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

மகாவலி அதிகாரப் பிரதேசத்தில் நெல்லின் கீழான மொத்த நிலப்பரப்பு 1992 இல் 8 சதவீதத்தால் 90,113 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்த வேளையில் ஏனைய பயிர்களின் கீழான நிலப்பரப்பு கணிசமானளவு 48 சதவீதத்தால் 10,540 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

1991 இல் 33 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 1992 இல் மேலும் 25 சதவீதத்தினால் 4,481 குடும்பங்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இதில் முறை 'சி', முறை 'பி' என்பனவற்றில் முறையே 2,005 குடும்பங்களும், 1,716 குடும்பங்களும் குடியமர்த்தப்பட்டன. 1992 இன் இறுதியில் மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 84,394 குடும்பங்களாக விளங்கியது.

அட்டவணை 1.31

## மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குடியேற்றம் ('எச்,' 'சி,' 'பி,' 'ஜி,' 'எல்' முறைகள்)

குடும்பங்களின் எண்ணிக்கை

| ஆண்டு | முறை | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | 'எச்' | 'சி' | 'பி' | 'ஜி' | 'எல்' | |
| 1976 ... ... | 2,383 | — | — | — | — | 2,383 |
| 1977 ... ... | 3,141 | — | — | — | — | 3,141 |
| 1978 ... ... | 2,754 | — | — | — | — | 2,754 |
| 1979 ... ... | 5,290 | — | — | — | — | 5,290 |
| 1980 ... ... | 7,407 | — | — | — | — | 7,407 |
| 1981 ... ... | 2,389 | 2,777 | — | — | — | 5,166 |
| 1982 ... ... | 1,449 | 2,683 | 1,918 | — | — | 6,050 |
| 1983 ... ... | 1,077 | 1,988 | 1,938 | 1,319 | — | 6,322 |
| 1984 ... ... | 1,956 | 1,992 | 1,381 | 446 | — | 5,775 |
| 1985 ... ... | 44 | 823 | 3,423 | 1,045 | — | 5,335 |
| 1986 ... ... | 780 | 2,151 | 1,260 | 583 | — | 4,774 |
| 1987 ... ... | 182 | 1,407 | 857 | 274 | — | 2,720 |
| 1988 ... ... | 14 | 1,081 | 656 | 85 | 3,270 | 5,106 |
| 1989 ... ... | 9 | 1,008 | 324 | 1,305 | 94 | 2,740 |
| 1990 ... ... | 1,680 | 3,427 | 3,492 | 366 | — | 8,965 |
| 1991 ... ... | 1,151 | 3,240 | 1,468 | 126 | — | 5,985 |
| 1992 (அ)... ... | 754 | 2,005 | 1,716 | 6 | — | 4,481 |
| மொத்தம் ... | 32,460 | 24,582 | 18,433 | 5,555 | 3 364 | 84,394 |

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மகாவலி மேலாண்மைச் சபை.

குறிப்பு: 1991 இற்கு முன்னைய தரவுகள் திருத்தப்பட்டுள்ளன.

### ஏனைய நீர்ப்பாசன அபிவிருத்தி

1992 இல் ஏனைய நீர்ப்பாசன அபிவிருத்தி வேலைகள், ஏற்கனவேயுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களை அபிவிருத்தி செய்வதிலும் மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டவை தவிர்ந்த பிரதேசங்களில் வேளாண்மை அமைப்புக்களின் முக்கிய பங்கேற்புடன் பயன்தரு நீர்ப்பாசன முகாமைத்துவ முறைகளை மேம்படுத்துவதிலுமே பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

கிரிண்டிஓயா நீர்ப்பாசன மற்றும் குடியமர்த்தல் செயற்றிட்டம் கட்டம் 1, கட்டம் 11, நில்வளகங்கை வெள்ளப் பாதுகாப்புத் திட்டம், மினிப்பே—நாகதீப நீர்ப்பாசனப் புத்தாக்கச் செயற்றிட்டம், தேசிய நீர்ப்பாசனப் புத்தாக்கச் செயற்

அட்டவணை 1.32

## மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் புதிதாகப் பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு

எக்டேயர்கள்

| விடயம் | பெரும் போகம் 1988/89 | சிறு போகம் 1989 | மொத்தம் 1989 | பெரும் போகம் 1989/90 | சிறு போகம் 1990 | மொத்தம் 1990 | பெரும் போகம் 1990/91 | சிறு போகம் 1991 | மொத்தம் 1991 | பெரும் போகம் 1991/92 (அ) | சிறு போகம் 1992 (அ) | மொத்தம் 1992 (அ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முறை 'எச்' ... ... | 22,897 | 3,767 | 26,664 | 30,362 | 10,874 | 41,236 | 31,385 | 19,806 | 51,191 | 31,931 | 4,312 | 36,243 |
| நெல் ... ... | 21,694 | 1,383 | 23,077 | 27,893 | 7,594 | 35,487 | 29,392 | 9,176 | 38,568 | 29,294 | 1,262 | 30,556 |
| ஏனைய பயிர்கள் ... ... | 1,203 | 2,384 | 3,587 | 2,469 | 3,280 | 5,749 | 1,993 | 10,630 | 12,623 | 2,637 | 3,050 | 5,687 |
| முறை 'பி' ... ... | 9,013 | 9,311 | 18,324 | 10,606 | 10,508 | 21,114 | 11,551 | 10,347 | 21,898 | 11,786 | 11,221 | 23,007 |
| நெல் ... ... | 8,688 | 8,691 | 17,379 | 10,207 | 9,721 | 19,928 | 10,912 | 9,837 | 20,749 | 11 175 | 10,624 | 21,799 |
| ஏனைய பயிர்கள் ... ... | 325 | 620 | 945 | 399 | 787 | 1,186 | 639 | 510 | 1,149 | 611 | 597 | 1,208 |
| முறை 'சி' ... ... | 13,136 | 12,919 | 26,055 | 17,374 | 14,718 | 32,092 | 19,026 | 15,687 | 34,713 | 18,599 | 15,934 | 34,533 |
| நெல் ... ... | 12,329 | 12,408 | 24,737 | 14,085 | 14,274 | 28,359 | 15,632 | 15,008 | 30,640 | 16,760 | 15,098 | 31,858 |
| ஏனைய பயிர்கள் ... ... | 807 | 511 | 1,318 | 3,289 | 444 | 3,733 | 3,394 | 679 | 4,073 | 1,839 | 836 | 2,675 |
| முறை 'ஜி' ... ... | 4,403 | 3,467 | 7,870 | 4,749 | 4,532 | 9,281 | 5,063 | 4,668 | 9,731 | 5,180 | 174 | 5,354 |
| நெல் ... ... | 4,104 | 1,773 | 5,877 | 4,546 | 2,702 | 7,248 | 5,017 | 2,613 | 7,630 | 4,959 | 117 | 5,076 |
| ஏனைய பயிர்கள் ... ... | 299 | 1,694 | 1,993 | 203 | 1,830 | 2,033 | 46 | 2,055 | 2,101 | 221 | 57 | 278 |
| முறை 'எல்' ... ... | — | — | — | 545 | 453 | 998 | 1,071 | 152 | 1,223 | 1,451 | 65 | 1,516 |
| நெல் ... ... | — | — | — | 346 | 137 | 483 | 700 | 84 | 784 | 824 | — | 824 |
| ஏனையபயிர்கள் ... ... | — | — | — | 199 | 316 | 515 | 371 | 68 | 439 | 627 | 65 | 692 |
| மொத்தம் ... ... | 49,449 | 29,464 | 78,913 | 63,636 | 41,085 | 104,721 | 68,096 | 50,660 | 118,756 | 68,947 | 31,706 | 100,653 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மகாவலி மேலாண்மைச் சபை.

றிட்டம், வடமேல் மாகாண சிறப்பு நீர்ப்பாசனச் செயற்றிட்டம் போன்ற அனைத்து முதன்மை நீர்ப்பாசனத் திட்டங்களின் நடவடிக்கைகளினது வேலைகளும் 1992 இல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. மேற்குறிப்பிட்ட செயற்றிட்டங்களின் மீதான மொத்தச் செலவு 1991 இன் ரூ. 3,120 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் ரூ. 4,170 இலட்சமாக விளங்கியது.

கிரிண்டி ஓயா நீர்ப்பாசன மற்றும் குடியமர்த்தல் செயற்றிட்டம் கட்டம் 1 இன் உள்ளூர் நீர் வழங்கல் திட்டம்—நிலை 1,1992 மாச்சில் முற்றுப்பெற்றது. 1992 இல் கிரிண்டி ஓயா நீர்ப்பாசன மற்றும் குடியமர்த்தல் செயற்றிட்டம் கட்டம் 11 இன் கீழ் உள்ளூர் நீர் வழங்கலில் 60 சதவீதத்தினை முற்றுப்பெறச் செய்யத் திட்டமிடப்பட்டிருந்தபோதிலும் இவ்வாண்டில் அதில் 18 சதவீதம் முற்றுப்பெற்றது. 1992 இல் கிரிண்டி ஓயா நீர்ப்பாசன மற்றும் குடியமர்த்தல் செயற்றிட்டத்தின் கட்டம் 1 இன் மொத்தச் செலவு ரூ. 690 இலட்சமாக விளங்கிய வேளையில் இத்திட்டத்தின் கட்டம் 11 இன் செலவு ரூ. 1,010 இலட்சமாக விளங்கியது. கிரிண்டிஓயா நீர்ப்பாசன மற்றும் குடியமர்த்தல் திட்டத்தின் கீழ் கட்டம் 1, கட்டம் 11 ஆகிய இரண்டிலும் நீர்ப்பாய்ச்சக்கூடிய நிலப் பரப்பு 9,120 எக்டேயர்கள் ஆவதோடு இது அம்பாந்தோட்டை மாவட்டத்தில் காணப்படுகின்றது.

அட்டவணை 1.33

**தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மை நீர்ப்பாசனத் திட்டங்கள் மீதான செலவு**

| செயற்றிட்டம் | உதவியின் மூலங்கள் | மொத்த வெளிநாட்டு உதவியின் கடப்பாடு (பத்து இலட்சங்களில்) | 1991 இன் உண்மையான செலவு (ரூ.ப.இ.) | 1992* இன் செலவு (ரூ.ப. இ.) | 1992* இறுதி வரை ஒன்று சேர்ந்த செலவு (ரூ.ப.இ.) |
|---|---|---|---|---|---|
| 1. கிருண்டி ஓயா நீர்ப்பாசன, குடியமர்த்தல் செயற்றிட்டம் (கி.ஓ.நீ.கு.செ.) கட்டம் I | ஆ.அ.வ.<br>கே.எப்.டபிள்யூ.<br>வே.அ.ப.நி.<br>வே.அ.ப.நி. | 30.0 (ஐ.அ. டொலர்)<br>43.5 (டி. மா.)<br>5.5 (சி.எ.உ)<br>12.0 (ஐ.அ. டொலர்) | 115 | 69 | 1,882 |
| 2. கிருண்டி ஓயா நீர்ப்பாசன, குடியமர்த்தல் செயற்றிட்டம் (கி.ஓ.நீ.கு.செ.) கட்டம் II | ஆ.அ.வ | 22.2 (சி.எ.உ.) | 62 | 101 | 486 |
| 3. நில்வளகங்கை வெள்ளப் பாதுகாப்புத்திட்டம் கட்டம் II | பிரான்சு | 200.0 (பி.பிராங்) | 82 | 6 | 1,687 |
| 4. மினிப்பே–நாகதீப நீர்ப்பாசன புனர்வாழ்வு செயற்றிட்டம் | யப்பான் | 1,295.0 (யென்) | 12 | 136 | 172 |
| 5. வடமேல் மாகாண சிறப்பு நீர்பாசன செயற்றிட்டம் | — | — | 41 | 56 | 114 |
| 6. தேசிய நீர்ப்பாசன புனர் வாழ்வு செயற்திட்டம் | — | — | — | 49 | 49 |

மூலம்: நீர்ப்பாசனத் திணைக்களம்

* தற்காலிகம்.

நில்வள கங்கை வெள்ளப் பாதுகாப்புத் திட்டத்தின் நிலை 11 இன் கீழ் 1992 இல் 150 எக்டேயர்களுக்கு நீர் வழங்கல் வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான மீதி வேலைகளை முற்றுப்பெறச் செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. 1992 இல் இச்செயற்றிட்டத்திற்கான செலவு ரூ. 60 இலட்சமாகும். இவ்வாண்டில் மினிப்பே—நாகதீப நீர்ப்பாசனப் புத்தாக்கச் செயற்றிட்டத்திற்காக ரூ. 1,360 இலட்சம் செலவிடப்பட்டது. வடமேல் மாகாண சிறப்பு நீர்ப்பாசனச் செயற்றிட்டம் தேசிய நீர்ப்பாசனப் புத்தாக்கச் செயற்றிட்டம் என்பனவற்றின் மீதான மொத்தச் செலவு ரூ. 560 இலட்சமாகவும் ரூ. 490 இலட்சமாகவும் விளங்கியது. வடமேல் மாகாணச் சிறப்பு நீர்ப்பாசனச் செயற்றிட்டத்தின் கீழான 10 திட்டங்களில் 7 திட்டங்கள் 1992 இல் பூர்த்தி செய்யப்பட்டன.

### ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

பொருளாதார வாய்ப்புக்களை விரிவுபடுத்தல், கிராமியப் பிரதேசங்களில் பொது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல், மாவட்டங்களுக்கிடையேயும், மாவட்டங்களுக்குள்ளேயுமான சமமின்மையைக் குறைத்து சமமான வளர்ச்சியினை மேம்படுத்தல் என்பனவற்றை நோக்கமாகக் கொண்டு 1979 இல் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (ஒ.கி.அ.நி.தி.) தொடங்கப்பட்டது.

ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் தற்போது 13 மாவட்டங்களை உள்ளடக்கி உள்ளது. 1981 இல் தொடங்கிய மாத்தளை மாவட்டத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (ஒ.கி.நி.தி.) 1992 இல் முற்றுப்பெற்றது. இவ்வாண்டில் இரண்டு புதிய ஒ.கி.அ.நி. திட்டங்கள் தொடங்கப்பட்டன. சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பின் உதவியுடனான அநுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அ.நி. திட்டமும், ஐக்கிய நாடுகள் பன்னாட்டு குழந்தை அவசரகால நிதியத்தினால் நிதியிடப்பட்ட புத்தளம் மாவட்டத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட அடிப்படைப் பணிகள் செயற்றிட்டமும் இவ்வாண்டில் தொடங்கப்பட்டன. ஒருங்கிணைக்கப்பட்ட அடிப்படைப் பணிகள் செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கம் இம்மாவட்டங்களில் வசிக்கும் குறைந்த வருவாயைக் கொண்ட குடும்பங்களின் போசாக்கு நிலைமையினை மேம்படுத்துவதாக அமைந்தது.

1992 இல் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மொத்தச் செலவு முன்னைய ஆண்டின் ரூ. 8,140 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 6,310 இலட்சமாக விளங்கியது.

## அட்டவணை 1.34

## ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான மாவட்ட ரீதியான செலவு 1991—1992

பத்து இலட்சம் ரூபாய்களில்

| மாவட்டம் செயற்றிட்டம் (அ) | வெளிநாட்டு உதவி மூலங்கள் | மதிப்பிடப்பட்ட செலவு | | | இது காலவரைக்கும் ஒன்று சேர்ந்த செலவு | | செலவு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | வெளிநாட்டு உதவிக் கடப்பாடுகள் | உள்நாடு | மொத்தம் | 1991 முடிவில் உள்ளபடி | 1992 முடிவில் உள்ளபடி (ஆ) | 1991 ஆம் ஆண்டின் செலவு | 1992 ஆம் ஆண்டின் செலவு (ஆ) |
| 1. மாத்தறை (1979)... | சீடா | 338 | 37 | 375 | 308 | 375 | 66 | 67 |
| 2. அம்பாந்தோட்டை (1979)... | நொராட் | 766 | 18 | 784 | 685 | 769 | 108 | 84 |
| 3. நுவரெலியா (1979)... | நெதர்லாந்து | 510 | 10 | 520 | 391 | 447 | 42 | 57 |
| 4. பதுளை (1981)... | வே. அ. ப. நி./சீடா | 500 | 110 | 610 | 434 | 496 | 70 | 62 |
| 5. இரத்தினபுரி (1984)... | நெதர்லாந்து | 263 | 5 | 268 | 197 | 241 | 39 | 44 |
| 6. மொனறாகலை (1984)... | நொராட் | 413 | 8 | 421 | 300 | 376 | 62 | 76 |
| 7. கேகாலை (1986).. | வே. அ. ப. நி. | 262 | 147 | 409 | 253 | 321 | 84 | 67 |
| 8. களுத்துறை (1987).. | பினிடா (பின்லாந்து) | 371 | 66 | 437 | 316 | 371 | 71 | 55 |
| 9. கண்டி (1987).. | சேர்மன் தொ.வ. | 120 | 4 | 124 | 30 | 55 | 10 | 25 |
| 10. கம்பகா (1989).. | யப்பான் ப.கூ.மு. | 521 | 38 | 559 | 511 | 538 | 251 | 27 |
| 11. தெ. மா. கி. அ. செ. (இ) (1991) .. | ஆ. அ. வ. | 1,520 | 400 | 1,920 | 11 | 42 | 11 | 31 |
| 12. அநுராதபுரம் (1992).. | சீடா | 5 | 44 | 49 | 0 | 9 | 0 | 8 |
| 13. புத்தளம் ஒருங்கிணைக்கப்பட்ட அடிப்படை பணிகள் செயற்றிட்டம் (1992) | யூனிசெப் | 106 | 53 | 159 | — | 27 | — | 27 |
| மொத்தம் ... | | 5,694 | 942 | 6,636 | 3,436 | 4,067 | 814 | 631 |

(அ) நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு அடைப்புக் குறிக்குள் காட்டப்பட்டுள்ளது.
(ஆ) தற்காலிகமானவை
(இ) தெ. மா. கி. அ. செ.—தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்.

மூலம் : கொள்கைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் அமைச்சு.